



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0ல், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இணையவழி கழிவு பரிமாற்ற மையம் (Online Waste Exchange Bureau) மற்றும் தொழிற்சாலைகளின் பசுமை மதிப்பீடு (Green Rating of Industries) ஆகியவற்றிற்கான இணையதளத்தை தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர். ராகுல்நாத், தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் திரு.எரிக் சொல்ஹெய்ம், டாக்டர் சவுமியா சுவாமிநாதன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் ஜெயந்தி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மிதா பானர்ஜி, தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், உணவு பாதுகாப்புத் துறையில் இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர். லால்வேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள சங்கத்தமிழ் நாள்காட்டியினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் சே.ரா. காந்தி, இணை இயக்குநர் ரெ. கோமகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திருப்பூர் – கரூர் – ஈரோடு போன்ற நகரங்களில் கூடுதலாக –

# புதிய ஜவுளிப் பூங்காக்களை திறக்கப்போவது எப்போது?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.5-

கொரோனா பெருந்தொற்று மற்றும் ஜி.எஸ்.டி அமல்படுத்தப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் ஜவுளித்துறை மிகவும் பாதிப்படைந்தது. இதனை சரிசெய்ய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பலமுறை ஒன்றிய அரசை வலியுறுத்தி கடிதங்களும் எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசு தனது 2024 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க "தமிழ்க் கனவுகள்" திட்டத்தின்கீழ் நிதியும் ஒதுக்கியது. இதனைத் தொடர்ந்து, மக்களவையில் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சகத்திடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் முடங்கி கிடக்கும் ஜவுளித் தொழிலை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

தமிழ்நாட்டில் தயாரிப்பு தொழில்நுட்ப நெசவு மையங்கள் மற்றும் மினி ஜவுளிப் பூங்காக்களை



அமைக்க பொருத்தமான இடங்களை தேர்வு செய்ய, எந்தக் குறிப்பிட்ட அளவுகோல்கள் பயன்படுத்தப்படுறது. இவ்வாறு அமைக்கப்படும் ஜவுளிப் பூங்காக்கள் மற்றும் மையங்கள், தேசிய தொழில்நுட்ப நெசவு இயக்கத்தின் (National Technical Textile Mission) இலக்குகளுடன் ஒருங்கிணைக்க திட்டம் ஏதேனும் உள்ளதா?

ரூ. 1,400 கோடி தேசிய தொழில்நுட்ப நெசவு இயக்க நிதியிலிருந்து தமிழ்நாட்டில் புதிய நெசவு மையங்களை உருவாக்க எந்த அளவு நிதி ஒதுக்கப்படும், மேலும் தனியார் முதலீட்டாளர்களை ஈர்க்க கூடுதல் நிதி அல்லது ஊக்கத்தொகை ஏதேனும் வழங்கப்படுமா?

கடந்த மூன்று ஆண்டுகளில் தேசிய தொழில்நுட்ப நெசவு இயக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட நிதியின் விவரங்களை, மாநில வாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியலாக ஒன்றிய ஜவுளி அமைச்சகம் வழங்குமா?

தமிழ்நாட்டில் ஜவுளி மையங்களை ஆதரிக்க கட்டமைப்பு மேம்பாடு எவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது, போக்குவரத்து, மின் விநியோகம் மற்றும் குடிநீர் வசதிகள் அடங்கிய மேம்பாட்டுத் திட்டங்கள் என்ன? இந்த புதிய மையங்கள், தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் திருப்பூர், கரூர், ஈரோடு போன்ற நெசவு நகரங்களுடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படும்.

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0யை தொடங்கி வைத்து, அங்கு பல்வேறு நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர்.ராகுல்நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஆலந்தூர் வடக்குப் பகுதி, 159வது வட்ட கழகச் செயலாளர் பா.கிருஷ்ணமூர்த்தியின் மகன் தினகரன் – கிருத்திகா தம்பதியர் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தீர்மான குழு செயலாளர் மீ.ஆ.வைத்தியலிங்கம், மீனம்பாக்கம் முன்னாள் செயலாளர் மீ.அ.வை.இளம்பரிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் வடக்கு பகுதி அவைத் தலைவர் மூர்த்தி, காஞ்சிபுரம் போக்குவரத்து கழக மண்டல செயலாளர் கா.ரவி, சிட்லபாக்கம் மனோகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



கழக நெசவாளர் அணி மாநில செயலாளர் சொ.பெருமாள் இல்லத் திருமண விழா பாளையங்கோட்டையில் நடைபெற்றது. மணவிழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட தேர்தல் பொறுப்பாளருமான கே.என். நேரு பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,அப்துல்வஹாப் எம்.எல்.ஏ உள்ளிட்ட கழக முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.